# மேசியாவின் வருகையை தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தனர்.

சிறுவர்களுக்குப் போதிப்பவர்கள் பாடம் P8b ஐ வாசிக்கவும்

## 1. மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களை போதிக்க ஜெபத்தோடும் வார்த்தையோடும் ஆயத்தம் செய்க.

ஜெபம் : "பரலோகப் பிதாவே மேசியாவாகிய இயேசுவின் வருகையைப் பற்றிய அநேக கணிப்புகளை நீர் நிறைவேற்றியதில் எனது மந்தைகள் களிகூர தயை கூர்ந்து உதவிபுரியும். மீண்டும் அவர் வருவதை எதிர் நோக்க உதவி புரியும்."

### பின்னணி குறிப்புகள்

குறிப்பு A : "மேசியா" என்பது, பழைய ஏற்பாட்டு காலங்களில் யூத மக்கள் தங்கள் இராஜாக்களுக்குத் தந்த பட்டமாகும். மேலும், ஒரு நாள் வந்து உலகம் எல்லாம் ஆட்சி செய்யப்போகும் ஒரு மாபெரும் இராஜாவைக் குறித்துப் பேச அவர்கள் மேசியா என்ற பட்டத்தை பயன்படுத்தினர். மேசியா என்பதற்கு அபிஷேகம் செய்யப்பட்டவர் என்று பொருள். அது பெரும்பாலும் கிறிஸ்து என்று மொழி பெயர்க்கப்பட்டது. ஆகவே, இயேசு கிறிஸ்து என்ற பெயருக்கு மேசியா இயேசு என்பது அர்த்தம்.

குறிப்பு B : தங்கள் மூதாதையரான ஆபிரகாமில் இருந்து தொடங்கி யூத மக்களுக்கு ஏறத்தாழ 4000 ஆண்டுகள் வரலாறு உண்டு. மேசியா வருவதற்கு 2000 ஆண்டுகளாக அவர்கள் காத்து இருந்தனர். அவர் வந்த போதோ பலர் அவரை விசுவாசித்தனர். ஆனால் பலர் விசுவாசிக்கவில்லை. 2000 ஆண்டுகளுக்குப் பின்னர், பல யூதர்கள் இயேசுவே தங்கள் மேசியா என்று விசுவாசிக்கின்றனர். ஆயினும் பலர் விசுவாசிக்கவில்லை. அவிசுவாசிகளான யூதர்கள் பலரும் இன்று மேசியாவுக்குக் காத்திருக்கின்றனர்.

குறிப்பு C : வேதாகமம் உண்மை என்பதற்கும், இயேசுவே மேசியா என்பதற்கு ஏராளமான காரணங்கள் உண்டு (1) தேவனே செய்யக் கூடிய பல காரியங்களை இயேசு செய்தார். (2) இயேசுவின் நாமத்தினால் செய்யப்படும் ஜெபங்களுக்கு தேவன் பதில் அளிக்கிறார். (3) இயேசுவின் அற்புதங்களையும் தரிசனங்களையும் நாம் பார்த்திருக்கிறோம். (4) எல்லா ஆவிகளை விடவும் இயேசு வல்லமையுள்ளவர் (5) இயேசு நமக்கும் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் தருகிறார் (6) இயேசுவைப் போல் வேறு யாரும் இல்லை (7) விசுவாசியின் இருதயத்துக்குள் வாழும் பரிசுத்த ஆவியானவர் நமது மெய்யின் ஆவிக்கு சாட்சி பகர்கிறார்.

விசுவாசிப்பதற்கு இன்னொரு காரணம் என்னவென்றால், வெகு காலத்திற்கு முன் வேதம் உரைத்த நூற்றுக்கணக்கான கணிப்புகள் ஏற்கெனவே உண்மையாகி விட்டன. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் வரும் மேசியாவைப் பற்றி ஏறக்குறைய 210 கணிப்புகளை செய்தனர். புதிய ஏற்பாட்டில் இயேசு இதில் ஏறக்குறைய 150 கணிப்புகளை நிறைவேற்றி விட்டு தாம் மீண்டும் வரும்போது ஒரு நாள் மீதி எல்லாவற்றையும் நிறைவேற்றப் போவதாகக் கூறினார்.

குறிப்பு D : வாக்குத்தத்தம் செய்தபடியே வந்துவிட்டார் என்றும் அவரே இயேசு என்றும் விசுவாசிக்கும் யூதர்களும் யூதர்கள் அல்லா தவருமே கிறிஸ்தவர்கள், வாக்குத்தத்தம் செய்யதபடியே மேசியாவாகிய இயேசு மீண்டும் வருவார் என்றும் கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனார்.

### பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களும் அவற்றின் புதிய ஏற்பாட்டு நிறைவேறலும்

- **எசாயா 9:6-7: மத்தேயு 2:1-11** இராஜாவாக பிறக்கப் போகும் ஒரு விசேஷமான பிள்ளை.
- **மீகா 5:1: மத்.2:1-11**, இயேசு எங்கே பிறப்பார்.
- **ஏசா.11:1-4: மத்.5:1-12** சிறுமையானவர்களையும் ஏழைகளையும் ஞானமாக வழிநடத்துவார்.
- **ஏசா. 53:4: மத்.8:14-17** நோயாளிகளை குணமாக்குவார்.
- **உபா.18:15: யோவான் 6:10-15** அற்புதமாக மக்களுக்கு அப்பம் அருளுவார். யோவான் 6:10-15
- **தானியேல் 9:25-26: மத்.24:14-25**, மேசீயாவின் வருகைக்குப் பின் நடக்கும் பாடுகள்.

- **சகரியா 9:9: மத் 21:1-11,** கழுதையின் மேல் ஏறி எருசலேமுக்குள் வருதல்.
- **எரேமியா 31:31: லூக்.22:17-22,** புதிய உடன் படிக்கையை ஏற்படுத்துதல்.
- **எசா.53:12: லூக்.22:37** குற்றவாளிகளோடு வைத்து இயேசுவும் எண்ணப்படுதல்.
- **சங்.22:14-18: மத் 27:32-50,** இயேசுவின் சிலுவைப்பாடு.
- **சக.12:10, யோவான் 19:34:37,** ஈட்டியால் மேசியா குத்தப்படுதல்.
- **ஏசா. 53:7-8, அப். 8:29-35:** நமது பாவங்களுக்கான கிருபாதார பலியே இயேசுவின் மரணம்.
- **சங்.16:9-11: லூக்.24:46-48: அப்.2:22-28** இயேசுவின் உயிர்ததெழுதல்.

இன்னொரு வகையான பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களில் **இயேசுவால் நிறைவேற்றப் பட்ட நல்லமுன்மாதிரிகள்** (Pallerns) ஆகும். உதாரணமாக 1 கொரி 15:45ல் இயேசு "கடைசி ஆதாம்" என்று அழைக்கப்பட்டார். மேலும் ரோமர் 5:12-12 மற்றும் 1 கொரி 15:20-23,45-50ல் இயேசுவுக்கும் ஆதாமுக்கும் இடையில் பல முக்கியமான ஒப்புமைகளும் முரண்பாடுகளும் காட்டப்படுகின்றன. இயேசுவும் ஆதாமும் ஒரு புதிய மனித குலத்தின் தலைவர்கள் ஆகும். அவரவர்களின் செய்கைகளின் மூலம் இருவருமே ஆழமான விளைவுகளை தங்கள் குலத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.



*சாத்தான் சோதித்தபோது ஆதாம் தேவகட்டளையை மீறினான்.*



*சாத்தான் சோதித்தபோது இயேசு அவனை எதிர்த்துநின்றார்.*

ஒரு சிறப்பான ஆய்வுக்கு இயேசுவுக்கும் கீழ்க்கண்ட மனிதர்களுக்கும் இடையில் இருக்கும் ஒப்புமை வேற்றுமைகளை கண்டுபிடிக்குமாறு நாங்கள் சிபாரிசு செய்கிறோம். (இதற்கு நீங்கள் செலவழிக்க நேரிடும் மிக அதிகமான நேரம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்)

**ஆதாம்,** (ஆதி.2,3),

**ஈசாக்கு** (ஆதி 22),

**யோசேப்பு** (ஆதி. 37,39.48),

**மோசே** (யாத்திராகமம், எண்ணாகமம்),

**ஆரோன்** ( யாத்திராகமம், லேவியராகமம்),

**யோசுவா** (யோசுவா),

**தாவீது** (1 சாமு 16-31, 2 சாமு 1-24),

**ஆஎலியா** ( 1 இராஜா 17-19, 2 இராஜா 2).

## 2. வரும் வாரத்துக்கான நடவடிக்கைகளை உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.

மக்களை சந்திக்கும்போதும் சாட்சி அளிக்கும்போதும் எவ்வாறு தீர்க்கதரிசிகள் வரும் மேசியாவைப் பற்றி கணித்தனர், இயேசு அவற்றை எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை விளக்கவும். சந்தேகம் உள்ள

விசுவாசிகளை சந்தித்து விசுவாசத்திற்கான காரணங்களை சிந்திக்குமாறு ஊக்கப்படுத்தவும். இயேசு அவர்களை ஆசீர்வதிக்கவும், அவர் நல்லவர், வல்லவர் என்பதைக் காட்டவும் அவர்களோடு சேர்ந்து ஜெபியுங்கள்.

- நீங்கள் போதனைப் பயிற்சி அளித்து வரும் புதிய தலைவர்களின் கீழ் உள்ள மக்களில் யாருக்காவது வேதம் தேவனுடைய வார்த்தை என்பதற்கு உறுதி தேவைப்பட்டால், அவர்களும் இந்தப் பாடத்தைப் படிக்குமாறு செய்யலாம்.
- வேதாகமத்தை வாசித்துக் கற்க விரும்பும் விசுவாசிகளிடம், மேலே உள்ள பட்டியலில் இருந்து, இயேசுவுக்கும் பழைய ஏற்பாட்டு தலைவர்களுக்கும் இடையில் உள்ள ஒப்புமை மற்றும் வேறுபாட்டைக் காணுமாறு கூறவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டம் இடவும்

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களையும், அதன் புதிய ஏற்பாட்டு நிறைவேறுதலையும் ஒன்றாகப் பலமுறை விசுவாசிகள் வாசிக்கும்படி செய்யவும். ஒவ்வொரு முறையும் இயேசு எவ்வாறு தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார் என்பதையும் கேட்கவும்.

கடந்த காலத்தில் நிறைவேறிய தீர்க்கத்தரிசனங்களால் எதிர்காலத்தைக் குறித்த தீர்க்கத் தரிசனங்களும் நிறைவேறும் என்ற நம்பிக்கை நமக்கும் கிடைப்பதை **விளக்கவும்.**

இயேசுவுக்கும் குறைந்தபட்சம் ஏதாவது ஒரு பழைய ஏற்பாட்டுத் தலைவருக்கும் (மேலே உள்ள பட்டியலில் இருந்து) இடையில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை **விளக்கவும்.**

A, B, C, D ஆகிய குறிப்புகளில் இருந்து விசுவாசிகளுக்கு பயனுடையது என்று கருதுபவற்றை ஆராதனையின் போது **விளக்கவும்.**

**சிறுவர்கள்** தாங்கள் ஆயத்தம் செய்ததைப் பெரியவர்களுக்கு வழங்கட்டும்.

1 கொரி. 11:26 ஐ சத்தமாக வாசித்துக் **கர்த்தரின் பந்தியை ஆரம்பிக்கவும்.** மேசியா மீண்டும் வந்து தனது மீதியுள்ள வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்று நம்பிக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள் கடந்த 2000 ஆண்டுகளாக அப்பம் பிட்டு பானம் பண்ணிக் கொண்டு வருகிறார்கள்.

எல்லோரும் லூக் 24:27 ஐ **மனனம் செய்க.** "மோசே முதலிய சகல தீர்க்கத் தரிசிகளும் எழுதின வேத வாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக் குறித்து சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்."

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களாக** அமர்ந்து, இயேசுவைப் பற்றிய பழைய தீர்க்கதரிசனங்களைக் குறித்து விவாதித்து, திட்டங்களை உறுதிப்படுத்தி, ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தவும்.

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net